இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

குற்றத்தின் தன்மை வேறு, அருள் கொடையின் தன்மை வேறு. எவ்வாறெனில், ஒருவர் செய்த குற்றத்தால் பலரும் இறந்தனர். ஆனால் கடவுளின் அருளும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனிதரின் வழியாய் வரும் அருள்கொடையும் பலருக்கும் மிகுதியாய்க் கிடைத்தது. இந்த அருள்கொடையின் விளைவு வேறு, அந்த ஒரு மனிதர் செய்த பாவத்தின் விளைவு வேறு. எவ்வாறெனில், ஒரு மனிதர் செய்த குற்றத்துக்குத் தீர்ப்பாகக் கிடைத்தது தண்டனை. பலருடைய குற்றங்களுக்கும் தீர்ப்பாகக் கிடைத்ததோ அருள்கொடையாக வந்த விடுதலை. (உரோ 5:15-16)

# கடவுளுடைய மக்களின் ஒற்றுமைப் பிணைப்பு மரியா

## திருத்தந்தை நினைவுறுத்து

**வத்திக்கான்:** மறைநூல், மற்றும் திருத்தூதர் வழிமரபு கொண்டு திருத்தூதர்களை செபச்சூழலில் அணைத்து காத்த இயேசுவின் தாயாம் அன்னை மரியா இன்று நம்மையும் எளிய வழியில் அழைத்து கடவுளுடைய மக்களாகிய நமது ஒற்றுமை யின் பிணைப்பாக செயல்படுகின்றார் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த பிப்ரவரி 13, திங்கட்கிழமை மெக்சிகோ மற்றும் ஸ்பெயினில் உள்ள இரண்டு திருத்தலங்கள் புனித குவாடலுபே அன்னை மரியாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டு இணைக்கப்பட்டதற்கு மகிழ்வைத் தெரிவித்து Toledo பேராயர் Francisco Cerro Chaves, அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அனைவருக்கும் எப்போதும் திறந்திருக்கும் கதவுகள் கொண்ட இல்லமாக, இறைவேண்டல் மற்றும் ஒற்றுமையின் இல்லமாக ஒவ்வொரு ஆலயமும் செயல்படவேண்டும் என்று அச்செய்தியில் அழைப்புவிடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுளுக்கும் மனிதகுலத்திற்கும் இடையிலான ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் புளிக்கரமாக இருக்க வேண்டும் என்று சவால் விடுக்கும் கன்னி மரியா இந்நோக்கத்திற்காகவே திருத்தலத்திற்கு வரும் மக்களை ஊக்கு விக்கிறார் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

எல்லாவற்றையும் புதியதாக்கி, உலகத்தை ஒன்றிணைத்த கடவுளின் மகன் மீது தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை அறிவிக்க, அவரது மேய்ப்பர்களாக


குவாடலுபே அன்னை மரியா ஆலயம்

அழைக்கப்பட்டவர்கள் இத்திருத்தலத்திற்கு வருபவர்கள் என்றும் உண்மையான தாயாம் அன்னை மரியா "கடவுளை ஆவியிலும் உண்மையிலும் வழிபட, நிலை வாழ்வளிக்கும் நீரை ஒவ்வொருவரின் இதயங்களிலும் கொண்டு வர உதவு தாகவும் எடுத்துரைத்துள்ளார்.

714 ஆம் ஆண்டில் மூரிஷ் படையெடுப் பாளர்களிடமிருந்து பாதுகாக்கப்பட்டு, உள்ளூர் மக்களால் வணங்கப்பட்டு வரும் கன்னிமரியாவின் திருஉருவச்சிலை ஆடுமேய்க்கும் ஒருவரால் குவாடலூபே ஆற்றின் கரையில், கண்டுபிடிக்கப்பட்டது. அச்சிலை கண்டெடுக்கப்பட்ட இடத்தி லேயே அன்னை மரியாவிற்கு ஆலயம் ஒன்று எழுப்பப்பட்டு, குவாடலூபே அன்னை திருத்தலம் என்றழைக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் FABC சமூகத் தகவல் தொடர்பு அலுவலகத்தின் தலைவராக நியமனம் பெற்றார்

பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் FABC எனப்படும் ஆசிய ஆயர்கள் பேரவைகள் கூட்டு அமைப்பின் சமூகத் தகவல் தொடர்பு அலுவலகத்தின் தலைவராக மூன்று வருட காலத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார்.


ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்

"FABC சார்பாக, 2023 ஜனவரி முதலாம் தேதி முதல், மூன்று ஆண்டுகளுக்கு FABC சமூக தொடர்பு அலுவலகத்தின் (OSC) தலைவராக உங்களை நியமிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று FABC-ன் தலைவர் கார்டினல் சார்லஸ் போ நியமன மடலில் கூறியுள்ளார்.

சமூக தகவல் தொடர்புகள் மூலம் ஆசியாவில் உள்ள மறைமாவட்டங்களில் ஆயர் பணியை வலுப்படுத்த சமூகத் தகவல் தொடர்பு அலுவலகம் ஒரு துடிப்பான மற்றும் பயனுள்ள கருவியாக மாற்றுவதற்கான பணி தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெளிவுப்படுத்தினர். .

# கோலசிலாங்கூரில் குழந்தை இயேசு திருவிழா கொண்டாடப்பட்டது.

கோலசிலாங்கூர், தஞ்ஜோங் கிராமாட்டில் அமைந்துள்ள குழந்தை இயேசு சிற்றா லயத்தின் திருவிழா கொடியேற்ற விழாவுடன் கடந்த 12 பிப்ரவரி 2023 அன்று இனிதே கொண்டாடப்பட்டது. 9 ஆம் திகதி தொடங்கி 11, சனிக்கிழமை வரை மூன்று நாள்கள் நவநாள் இறைவேண்டல்களும



பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களுடன் விழா பொறுப்பாளர்களும் பங்குத்தந்தையும்

திருப்பலிகளும் இடம் பெற்றன. முதல்நாள் திருப்பலியை அருள்பணி வின்சன் தோமஸ் அவர்களும், அடுத்த நாள் திருப்பலிக்கு அருள்பணி பொனவெஞ்சர் இராயப்பன் அவர்களும் தலைமையேற்றனர்.

சனிக்கிழமை நடைப்பெற்ற திருப்பலிக்குப் பின்னர் நற்கருணை பவனியில் ஆயிரக்கணக்கானோர் பங்குப் பெற்று குழந்தை இயேசுவின் ஆசீரைப் பெற்றனர். திருவிழா தினமான ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு தமிழில் பங்குத் தந்தை ஜேம்ஸ் கேப்பிரியல் அவர்களும் காலை 10.00 மணிக்கு ஆங்கிலத்தில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களும் திருப்பலி கொண்டாடினர்.

இவ்வாண்டுக்கான திருவிழாவின் மையக் கருத்து ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர் என்பதாகும். பேராயர் தமது மறையுரையில் தூய ஆவியாரின் முக்கியத்துவம், மாட்சி, ஆசீர் மற்றும் வழிகாட்டல் குறித்து விளக்கம் அளித்தார். குழந்தைகளாய் மாறுவோரே ஆவியானவரின் கொடைகளைப் பெற முடியும் என்றும் வலியுறுத்தினார்.


திருப்பலியில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

திருவிழா திருப்பலியின் வழிப்பாடுகள் அனைத்தும் சிறுவர்கள் பங்கெடுத்து வழிநடத்தினர். கலந்துக் கொண்ட அனைத்து சிறுவர் களுக்கும் பலவிதமான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. திருவிழாவின் இறுதி நாளில் அருகில் உள்ள சுற்றுலாத் தலமான புக்கிட் மெலாவாத் திக்கு சிறுவர்கள் திறந்த வெளி வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டனர். வெளிப் பங்கிலிருந்து அதிகமானோர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. திருவிழா அன்று அனைவருக்கும் காலை உணவும் மதிய உணவும் வழங்கப்பட்டன.

-அந்தோணி மாசிலாமணி

# கத்தோலிக்க வார இறுதி பன்மொழி கூட்டு திருமண தயாரிப்பு குழு தியானம்

**போர்ட்டிக்சன்:** முதல் ஒருங்கிணைந்த, பன்மொழி கத்தோலிக்க திருமண தயாரிப்பு வார இறுதி பயிற்சி கடந்த பிப்ரவரி 4 முதல் 6 வரை, இங்குள்ள குழந்தை இயேசு (Infant Jesus) மையத்தில் நடைபெற்றது. படைப்பாளர்கள் தங்கள் குழந்தைகளையும் உடன் அழைத்து வந்து, நிகழ்வை ஒரு வசதியான குடும்ப நிகழ்வாக மாற்றினர்.



திருமண தயாரிப்பு தியானத்தில் கலந்துகொண்டோருடன் அருள்தந்தை ஜெஸ்தஸ் பிரெய்ரா

இத்தியானமானது, நான்கு முக்கிய மொழிக் குழுக்களைச் சார்ந்தோர் ஒருவருக்கொருவர் பழகுவதையும் கற்றுக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது அதன் சிறப்பு எனலாம். ஒவ்வொரு குழுவும் தங்கள் விளக்கப் படைப்புகளை பகிர்ந்து கொண்டனர், அவ்வேளையில், ஒவ்வொரு மொழி குழுவினரும் நேர்மறையான மற்றும் வளர்ச்சிக்கான தேவைகள் குறித்து விவாதித்தனர்.

மிக நெருக்கமான, தீவிர அமர்வுகளுக்குப் பின், குழந்தைகளுடன் விளையாட்டுக்காக அனைவரும் கடற்கரைக்குச் சென்றனர். தியானத்தில் கலந்துகொண்டோர், நான்கு மொழிகளில் செபமாலை இறை வேண்டலுக்கு முன்பு இரவு உணவின் போது நட்புறவு மற்றும் விவாதங்களில் பங்கேற்றனர்

மறுநாள் அமர்வானது இங்குள்ள அமல உற்பவி அன்னை தேவாலயத்தில் திருப்பலியோடு துவங்கியது, அதைத் தொடர்ந்து கடற்கரை உல்லாச நேரத்தின் இரண்டாவது சுற்றுக்கு முன் மேலும் மிக நெருக்கமான கலந்துரையாடல் இடம்பெற்றது. பின்னர் தோழமை BBQ நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்ப்ட்டது.

திங்கட்கிழமை இல்லம் திரும்புவதற்கு முன், வெவ்வேறு குழுக்கள் அந்தந்த திருமண தயாரிப்பு குழுக்களில், வார இறுதியில் ஒருவரையொருவர் சந்தித்து மேலும் அறிந்துணர ஏற்பாடு செய்யப்

# 'தவக்காலம் ஒப்பில்லா காலம்' அகந்தையொழித்து ஆணவம் வெல்வோம்

- அலை பாயும் மனதை ஆற்றுப்படுத்த வந்த அருமை காலம்.
- ஊனமான எண்ணங்களை ஞானமான வண்ணமயமாக்கிட வந்த காலம்
- தவிப்பும் கலக்கமும் நிறை வாழ்வில் மகிழ்வும் நிம்மதியும் தந்திட உதவும் காலம்
- உடலும் மனமும் இறைபதம் நாடிட திரும்பச் சொல்லும் மீட்பின் காலம்
- பகைமையும், வேதனையும் நீங்கி நட்பை பரிசளிக்க வந்த அன்பின் காலம்
- சிலுவைப் பாடே சீர்மகுடமென பறை சாற்றும் தனிப் பெரும் கருணையின் காலம்.
- சுத்தமில்லா இதயங்களை சுத்திகரித்து அலங்கரிக்கும் ஒப்பில்லா காலம்
- தவமும், செபமும், தியாகமும் மனங்களில் நிறைந்திடும் வேள்விக் காலம்
- எண்ணற்ற பக்தி முயற்சிகளை முன்னெடுக்க உற்சாகப் படுத்தும் அருட் காலம்
- நன்மைகளையும், நன்னயங்களையும் செய்யத்தூண்டும் நற்செயல் காலம்
- உணவிலும் உணர்விலும் கட்டுப்பட்டு மனதையும் உடலையும் உரமேற்றும் காலம்

*காஸ்மீர் ரோச்,*
*சென்னை*

# உலகத்தை சாராமல் நற்செய்தியை உலகிற்கு கொண்டு செல்லுங்கள்

உலகத்தைப் பற்றிக்கொள்ளாமல் உலகிற்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகிறார்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த புதன்கிழமை மறையுரையில் கூறினார்.

"திருஅவையை பொறுத்தவரை, உலக மாயை வலையில் விழுவதானது மிக மோசமான செயலாகும்' என்று அவர் அறிவுறுத்தினார்.

கடந்த பிப்ரவரி 15 ஆம் தேதி மறைந்த திருத்தந்தை ஆறாம் பவுல் வரவேற்பு அறையிலிருந்து தனது மறையுரை ஆற்றிய திருத்தந்தை பிரான்சிஸ், தம் சீடர்களுக்கு இயேசு கூறிய வார்த்தைகளான "இதோ! ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன் (மத் 10:16) என்பதை மேற்கோள்காட்டி பேசினார்.

நிறைவாக, நாம் நரிகளாக மாறினால் நிச்சயம் தோற்றுவிடுவோம். ஏனெனில், நமது பாதுகாப்புக்கு ஆயனாக இயேசு இருக்கமாட்டார். அதே வேளையில் நாம் செம்மறிகளாக மாறினால் இயேவின் பாதுகாப்பில் உலக போராட்டத்தில் வெற்றிபெறும் வாய்ப்பு நிச்சயம் உண்டு என்றார்.



# ஆண்டவரில் நிலைத்திருப்போம் சோதனை வெல்வோம்!

இன்று தவக்காலத்தின் முதல் ஞாயிறு. மீண்டும் திருவழிபாட்டு ஆண்டின் ஒரு முக்கிய காலத்தில் காலடி வைத்துள்ளோம். தவக்காலத்தின் முதல் ஞாயிறானது, நம்மை இறைவேண்டல், நோன்பு மற்றும் தர்மம் ஆகியவற்றில் முழு கவனம் செலுத்தி நல்ல பண்புகளோடு வாழ நமக்கு அழைப்பு விடுக்கிறது. இன்றைய வாசகங்களும் நம்மை படைத்த இறைவனை நினையாது பாவத்தில் விழும் போது, சோதனைகள் நம்மை சூழ்ந்து கொள்கிறது என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறன.

இன்றைய முதல் வாசகத்தில் அலகையினால் வஞ்சிக்கப்பட்ட முதற் பெற்றோர் பாவம் செய்கின்றனர். இறைவனின் கட்டளைகளை மீறுகின்றனர். இறைவனின் சாயலாகவும், உருவிலும் படைக்கப்பட்ட மனிதன் தன் தகுதிக்கு மீறியப் பேராசையோடு "கடவுளைப் போலாக" விருப்பம் கொள்கிறான். தொடக்க முதல் இருந்து வரும் தொடரும் சோதனை இதுதான். "கடவுளாக மாற விழைவது" புனித 2-ஆம் ஜோன் போல் சொல்வது போல் பாவம் ஒன்று இல்லாதது போல் வாழும் அகந்தை வாழ்வு இன்றைய மாபெரும் சோதனையாக மாறிவிட்டது. தவறக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் தடுமாறாமல் வாழ்பவர்களே சாதனையாளர்கள். வாழ்வில் குழப்பமான சூழ்நிலையில் சரியா? தவறா? என்று தெளிவாக சிந்திக்காமல் சமரசம் செய்து கொள்ளும் போது பாவம் நுழைகிறது. வாழ்வில் "முக்கியத்துவம்" எதற்கு? என்ற தெளிவு இருந்தால், சோதனைகளைச் சாதனைகளாக்க முடியும்.

இன்றைய வியாபார உலகின் இன்னுமொரு சோதனை குறுக்கு வழியில் எளிய வெற்றிகளைத் தேடிப்போவது. கல்லை அப்பமாக மாற்றுவதும், தலை குனிந்து தெண்டனிட்டு வணங்குவதும் ஆலயத்தின் உயர்ந்த பகுதியிலிருந்து குதிப்பதும் இயேசுவினால் முடியாத செயல்களே அல்ல! ஆயினும் இவை இயேசுவின் பணி வாழ்வில் எளிய, குறுக்கு வழிகளில் மீட்புக்காக செயல்படுங்கள் என வைக்கும் சாத்தானின் சோதனைகள். இறைவார்த்தையின் ஒளியில் நடை போட்டு, சிலுவையின் வழி தேர்ந்து, அலகையை வெல்லும் இயேசு நமக்கு ஒரு நல்ல பாடம். நம்முடைய வாழ்க்கையிலும் இலகுவான பாதையைத் தேர்ந்தெடுத்து அல்லது குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்து முன்னேறுவதற்கான சோதனை வரும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் அந்தச் சோதனையில் வீழ்ந்துவிடாமல், இயேசுவைப் போன்று ஆண்டவரில் உறுதியாக இருந்து, அதனை வெற்றிகொள்வது நல்லது.

அது உடல் சார்ந்த சோதனையோ, உள்ளம் சார்ந்த சோதனையோ அல்லது மன உறுதி சார்ந்த சோதனையோ எதுவாக இருந்தாலும் இறைவேண்டலினாலும், இறைவார்த்தையாலும் வென்றிட உறுதிக் கொள்வோம்.

சோதனை எங்கிருந்து வரும்? நமக்கும் நாம் சுற்றியிருக்கும் மனிதர்களிடமிருந்தும் பொருள்களிடமிருந்துமே சோதனைகள் வரும். அவற்றில் நாம் வீழ்ந்துவிடாமல், ஆண்டவரில், அவருடைய வார்த்தையில் நிலைத்திருந்து சோதனையை வெற்றி கொள்வது நல்லது. ஏனெனில், சோதனைகளை வெற்றிகொள்கின்றவர் வாழ்க்கையில் வெற்றிகொள்கின்றார். ஏன், எல்லாவற்றிலும் வெற்றி கொள்கின்றார்.

*-சவரிநாதன், சுங்கைபட்டாணி*

### தவக்காலத்தின் முதல் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | தோ.நூ. **2: 7-9; 3: 1-7** |
| தி. பாடல்119: 51: 1-2. 3-4a. 10-11. 12,1 | |
| வாசகம்: | உரோ 5: 12-19 |
| நற்செய்தி: | மத் 4: 1-11 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**